2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178-வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4-ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப்பெற்றவர்	:	திரு. மு. அப்பாவு அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி
முன்மொழிந்தவர்	:	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
வழிமொழிந்தவர்	:	மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. மு. அப்பாவு அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால், மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்கள், இப்பேரவையின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவராக பேரவையால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. மு. அப்பாவு அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்துடன் என்னுடைய பணியை நிறைவு செய்கின்றேன்.

அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களை மரபுப்படி அவரது இருக்கையில் அமரச் செய்தல் வேண்டும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அழைத்துவந்து

2021 மே 12] [*தற்காலிகப் பேரவைத் தலைவர்*]

பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும் அழைத்துவந்து, அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதி 8, உள்விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:*

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. கு. பிச்சாண்டி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

முன்மொழிந்தவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

வழிமொழிந்தவர் : மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள்